# பரீட்சகரின் அறிக்கை

## AA3 பரீட்சை – 2018 யூலை

## (AA32) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

**மேலோட்டமான பார்வை :**

இவ்வினாத்தாள் 100 புள்ளிகளை உள்ளடக்கி மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது.

1. பகுதி **A** ஆனது 20 புள்ளிகளுக்காக நான்கு கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது. – **ஒவ்வொன்றுக்கும் 05 புள்ளிகள்**
2. பகுதி **B** ஆனது 30 புள்ளிகளுக்காக மூன்று கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது. – **ஒவ்வொன்றுமக்கும் 15 புள்ளிகள**
3. பகுதி **C** ஆனது 50 புள்ளிகளுக்காக இரண்டு கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது. – **ஒவ்வொன்றுமக்கும் 25 புள்ளிகள**

**பொதுவான கருத்துக்கள் :**

இவ்வினாத்தாளுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாத்தாளுக்கு விசேடமாக வினா இல. 08 மற்றும் 09 இற்கு திருப்திகரமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினா இலக்கங்கள் 01 மற்றும் 02 இற்கு விடையளிக்க முயற்சிக்காமலோ அல்லது பிழையான விடைகளை அளித்தோ இருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இதற்கான பிரதான காரணமாக அந்தச் சகல வினாக்களும் முகாமைத்துவக் கணக்கீட்டுடன் தொடர்புடைய கோட்பாட்டு ரீதியான விடயங்கள் மீது கவனத்தைச் செலுத்தியிருந்ததுடன் அத்தகைய பாடப் பரப்புகளில் பரீட்சார்த்திகளின் அறிவு குறைவாக இருந்தமையாகும்.

**பகுதிரீதியான செயலாற்றுகை :**

**பகுதி A** இற்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையானது மோசமாக விடையளிக்கப்பட்டிருந்த வினா இல. 01 மற்றும் 02 இனைத் தவிர திருப்திகரமானதாக இருந்தது.

**பகுதி B** இற்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையானது திருப்திகரமானதாக இருக்கவில்லை.

**பகுதி C** இற்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையானது திருப்திகரமானதாக இருந்தது.

---

## பகுதி A

### வினா இல. 01

இவ்வினா தனிப்பட்ட நிதித் திட்டமிடல் தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு தனிப்பட்ட நிதித் திட்டமிடலின் 02 அனுகூலங்களையும் 03 அடிப்படை நியதிகளையும் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தது.

கையளவு பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்கான மொத்தப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர்.

முகாமைத்துவக் கணக்கீட்டிலுள்ள தனிப்பட்ட நிதித் திட்டமிடல் பற்றிய சரியான அறிவைப் பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை என்பதும் அதனால் அவர்கள் தொழில்நுட்ப அம்சங்கள்மீது கவனஞ் செலுத்தாது தெளிவற்ற விடைகளை வெறுமனே எழுதியிருந்ததையும் அவர்களது விடைகளிலிருந்து அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதன் காரணமாக, அவர்களால் தனிப்பட்ட நிதித் திட்டமிடலுக்குப் பொருத்தமான அனுகூலங்களையும் அடிப்படை நியதிகளையும்கூடக் குறிப்பிடக்கூடியதாக இருக்கவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

சுய கற்றல் புத்தகத்திலுள்ள கோட்பாட்டு ரீதியான பகுதிகளில் அதிக கவனத்தைச் செலுத்தி முழுப் பாடத்திட்டத்தையும் கற்பதற்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

## வினா இல. 02

பணத்திற்கான பெறுமதியுடன் தொடர்புடைய பதங்களான சிக்கனம், வினைத்திறன், விளைவுத்திறன் ஆகியவற்றை விபரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை. விடையளிக்க முயற்சித்திருந்த பரீட்சார்த்திகள்கூட திருப்திகரமான அளவு புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர். மோசமாக விடையளிக்கப்பட்டமைக்கான பிரதான காரணமாக வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாமை மற்றும் பணத்திற்கான பெறுமதியுடன் தொடர்புடைய விடயங்களை அறிந்திராமை ஆகியன காணப்பட்டன. குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகளிடம் பணத்திற்கான பெறுமதியுடன் தொடர்புடைய இந்தப் பிரதான பதங்கள் பற்றிய விழிப்புணர்வு காணப்படவில்லை என்பதை அவர்களின் விடைகளிலிருந்து அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

கோட்பாட்டு ரீதியான பகுதிகளில் அதிக கவனத்தைச் செலுத்தி முழுப் பாடத்திட்டத்தையும் கற்பதற்குப் பரிந்துரைக்கப்படுகிறது. இந்த வகை வினாக்களுக்காக விடையளிப்பதற்கு ஏஏரி ஸ்ரீ லங்கா இன் சுய கற்றல் புத்தகம் மீது கவனம் செலுத்துதல் முக்கியமானதாகும்.

## வினா இல. 03

இங்கு பகுதி (a) இல், 2017 மார்ச் 31 மற்றும் 2018 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான வியாபார வருமதிகள் சேகரிப்புக் காலத்தை (நாட்களில்) கணிப்பிடுமாறும் பகுதி (b) இல், பகுதி (a) யில் மேற்கொண்ட கணிப்பீட்டின்படி, தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு வியாபார வருமதிகளை முகாமை செய்வதற்கான இரண்டு தந்திரோபாயங்களைக் குறிப்பிடுமாறும் கேட்கப்பட்டது. இது ஒரு மிக இலகுவான வினாவாக இருந்ததுடன் இதுபோன்ற வினாக்கள் முன்னைய பரீட்சைகளில்கூட பரீட்சிக்கப்பட்டிருந்தன.

சில பரீட்சார்த்திகளுக்கு வியாபார வருமதிகள் சேகரிப்புக் காலத்தை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றித் தெரியவில்லை. சில பரீட்சார்த்திகள் கணிப்பீடுகளில் சராசரி வருமதிகளைக் கருத்தில் எடுத்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் கணிப்பீடுகளுக்கு விற்பனைகளுக்குப் பதிலாக விற்பனைக் கிரயத்தினைக் பிழையாகக் கவனத்திற் கொண்டிருந்தனர். குறித்த சில பரீட்சார்த்திகள் விற்பனைகளுக்குப் பதிலாக சராசரி விற்பனைகளை கணிப்பீட்டிற்காக எடுத்திருந்தனர்.

குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் பகுதி (a) யில் கணிப்பிடப்பட்டதற்கிணங்க, பகுதி (b) இற்கான தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு வியாபார வருமதிகளை முகாமை செய்வதற்குப் பயன்படுத்தப்படும் இரண்டு தந்திரோபாயங்களைக் குறிப்பிடுவதற்கு தவறியிருந்தனர். பரீட்சார்த்திகள் கணிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்ட தந்திரோபாயங்களை அடையாளங் காணவும் பகுப்பாய்வு செய்வதற்குமான திறன்களை விருத்திசெய்து கொள்ள வேண்டும். இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- வினாவுக்கு விடையளிக்குமுன் அதனைச் சரியாக வாசிக்கவும்.
- கடந்தகால வினாப்பத்திரங்களிலும் சுய கற்றல் புத்தகத்திலுமுள்ள இதுபோன்ற வினாக்களில் பயிற்சி பெறவும்.
- கையெழுத்தை மேம்படுத்தவும்.

## வினா இல. 04

வினாவில் தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விசேட கட்டளைக்கான ஊழியர்களின் தொடர்புபட்ட கிரயத்தைக் கணிப்பிடுமாறு இங்கு கோரப்பட்டிருந்தது. விடையளிக்கும்போது, பல பரீட்சார்த்திகள் ஆகக்குறைந்த கொடுப்பனவின் கீழான திறன்மிக்க ஊழியர்களை சம்பந்தப்படாத கிரயம் ஒன்றாகக் கவனத்திற்கொண்டிருக்கவில்லை. பரீட்சார்த்திகள் அது ஒரு ஆழ்கிரயம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இதன் விளைவாக, அவர்கள் சகல ஊழிய மணித்தியாலங்களையும் கணிப்பீட்டிற்காக எடுத்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் தேவையான மேலதிக திறன்மிக்க ஊழிய மணித்தியாலங்களைச் சரியாகக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- தொடர்புடைய கிரயங்கள் மற்றும் கணக்குகளில் அவற்றின் பிரயோகங்கள் ஆகியன பற்றிய எண்ணக்கருக்கள் பற்றி ஆழமான புரிதல்களைப் பெறுவதற்குப் பரீட்சார்த்திகள் தேவைப்படுத் தப்படுகின்றனர்.
- இதே மாதிரியான கடந்தகால வினாத்தாள்களைச் செய்து பார்க்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

<u>**பகுதி B**</u>

## வினா இல. 05

வழங்கப்பட்ட தகவல்களைக் கொண்டு தரப்பட்ட தீர்மானங்களுக்கான பங்களிப்புகளைக் காட்டும் விளைவாய்வு அட்டவணையை தயாரிக்குமாறு பகுதி (a) தேவைப்படுத்தியுள்ள அதே வேளை மிகை – மிகை மற்றும் மிகை – குறை அடிப்படை நியதிகளை / தீர்வுகளை இனங்காணுமாறு பகுதி (b) தேவைப்படுத்தியுள்ளது.

குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் நன்றாக விடையளிக்கவில்லை என்பதுடன் இவ்வினாவுக்கான புள்ளிகளையும் பெற்றிருக்கவில்லை. இங்கு தாழ்வாக உள்ளபோது அல்லது சராசரியாக உள்ளபோது அல்லது உயர்வாக உள்ளபோது எதிர்பார்க்கப்பட்ட கேள்வியின் கீழ் விளைவாய்வு அட்டவணையைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகளால் அந்தத் தகவல்களைப் பிடித்துக்கொள்ள முடியவில்லை. விசேடமாக, அதிகளவான பரீட்சார்த்திகளால் மூன்று கேள்வி நிபந்தனைகளையும் 03 வேலை மாற்றுக்கான விளைவாய்வு அட்டவணையை நிருமாணிப்பதையும் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியவில்லை. தொடர்புடைய நிரை மற்றும் நிரல்களுடன்கூடிய அட்டவணை சரியாக நிருமாணிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்ட பொதுவான தவறாகக் காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக, அதிகளவான பரீட்சார்த்திகள் செய்முறைகளைச் சரியானவாறு காட்டியிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் பெறுமானங்களைப் பெறும்போது எண்கணிதத் தவறுகளை விட்டிருந்தனர்.

குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் பகுதி (b) இற்காக, விளைவாய்வு அட்டவணையின் அடிப்படையில் மிகை – மிகை மற்றும் மிகை – குறை நியதிகளை / தீர்வுகளை அடையாளம் கண்டிருக்கவில்லை. குறிப்பிட்ட பரீட்சார்த்திகள் மிகை – மிகை மற்றும் மிகை – குறை ஆகியவற்றை அடையாளம் காண்பது பற்றிய புரிந்துணர்வைக் கொண்டிருக்கவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- கடந்தகால வினாத்தாள்களிலுள்ள இதே வகையான வினாக்களில் பயிற்சி செய்வதுடன் சுய கற்றல் புத்தகத்திலுள்ள உதாரணங்களையும் பயிற்சி செய்து பார்க்குமாறு பரிந்துரைக் கப்படுகிறது.
- செய்முறைகள் சரியாகக் காட்டப்பட வேண்டும்.

## வினா இல. 06

இவ்வினா தொடர்புடைய கிரயம் - தீர்மானம் எடுத்தல் இனை அடிப்படையாகக் கொண்டது. தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் உதிரிப்பாகம் X ஆனது வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட வேண்டுமா என்பதை மதிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தது.

குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நன்றாக விடையளிக்கவில்லை என்பதுடன் உயர் புள்ளிகளையும் பெற்றிருக்கவில்லை. ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது. குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் தீர்மானத்துடன் தொடர்புடைய மேலதிக கிரயங்கள் மற்றும் கிரயச் சேமிப்புகளை அடையாளம் காண்பதற்கான தேவையான கணிப்பீடுகளைச் செய்வதற்கு இயலாமலிருந்தனர். கணிப்பீடுகளைச் சரியாகச் செய்திருந்த சில பரீட்சார்த்திகளுக்கு கணிப்பீடுகளின் அடிப்படையில் பரிந்துரையை வழங்க முடியவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- கடந்தகால வினாத்தாள்களிலுள்ள இதே வகையான வினாக்களில் பயிற்சி செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.
- வினாவில் ''மதிப்பிடுக'' எனக் கேட்கப்படும்போது, அங்கு கணிப்பீடுகளின் அடிப்படையில் பரிந்துரையை வழங்குவது அவசியமானதாகும்.

## வினா இல. 07

2018 யூன் மாதத்திற்கான பாதீடு, உண்மைப் பெறுமானங்கள் மற்றும் பாதீட்டிற்கும் உண்மைப் பெறுமானத்திற்குமிடையிலான வித்தியாசம் ஆகியவற்றினைக் காட்டும் தொழிற்பாட்டுக் கூற்றினைத் தயாரிக்குமாறு இங்கு கேட்கப்பட்டிருந்தது.

இவ்வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது. குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் 2018 யூன் மாதத்திற்கான பாதிடப்பட்ட மற்றும் உண்மைப் பெறுமானங்களுக்கிடையிலான வேறுபாட்டைக் காட்டியிருக்கவில்லை. குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் கணிப்பீடுகளின்போது எண்கணித வழுக்களை விட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தொழிற்பாட்டுக் கூற்றினைத் தயாரிக்கையில், மாறுபடும் விற்பனைப் பணிசையினை (தரகு) கவனத்திற் கொண்டிருக்கவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- கடந்தகால வினாத்தாள்களிலுள்ள இதே வகையான வினாக்களையும் ஏனைய பயிற்சி வினாக்களையும் செய்துபார்க்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது.
- பரீட்சார்த்திகள் தொழிற்பாட்டுக் கூற்றினைத் தயாரிக்கையில் சம்பந்தப்பட்ட வடிவ அமைப்புகளை கற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

## <u>பகுதி C</u>

## வினா இல. 08

**பகுதி A** யில், மூலதனக் கிரயம் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்பட்டதுடன் **பகுதி B** யில் முதலீட்டு மதிப்பீடு பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது.

**(A)** வினாவின் இப்பகுதிக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை நன்று. இதனால், குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் கணிப்பீடுகளில் எண்கணித வழுக்களை விட்டிருந்தமை அவதானிக்கப் பட்டது. அவர்களில் சிலர் மூலதனக் கிரயத்தின் சூத்திரத்தை எழுதும்போது "+" அல்லது "–" போன்ற கணித வழுக்களை விட்டிருந்தனர். குறிப்பிட்ட பரீட்சார்த்திகள் சாதாரண பங்குகளின் மூலதனக் கிரயத்திற்கான சூத்திரத்திற்கு வளர்ச்சிக் காரணியை % கவனத்திற் கொண்டிருக்க வில்லை. சில பரீட்சார்த்திகள் சாதாரண பங்குகளின் கிரயம் மற்றும் தனிச்சங்களின் கிரயம் ஆகியவற்றைக் கணிப்பிடும்போது % குறியீட்டினை எழுதியிருக்கவில்லை.

குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் சந்தைப் பெறுமதிகளைப் பயன்படுத்தி நிறையேற்றப் பட்ட சராசரி மூலதனக் கிரயத்தைக் கணிப்பிட்டிருக்கவில்லை.

**(B)** NPV மற்றும் IRR கணிப்பீடுகளுடன் புதிய செயற்றிட்டம் ஒன்றில் முதலீடு செய்வதற்கான நம்பகத்தன்மையை மதிப்பிடுமாறு கோரப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் நன்றாக விடையளிக்கப்பட்ட ஒரு வினா இதுவாகும். சிலர் அடைப்புக்குறிகளைப் பயன்படுத்தி காசு வெளிப்பாய்வு ஒன்றாக ஆரம்ப முதலீட்டைக் காட்டியிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் தங்களது கணிப்பீடுகளில் தொழிற்படு மூலதனம் மற்றும் தொழிற்படு மூலதனத்தின் வசூலிப்பு ஆகியவற்றை கவனத்திற் கொண்டிருக்கவில்லை. மேலும், சில பரீட்சார்த்திகள் 5 ஆவது ஆண்டிற்காகவும் மூலதனப் படியைக் கணிப்பிட்டிருந்தனர். அத்துடன் சில பரீட்சார்த்திகள் NPV கணிப்பீட்டில் மூலதனப் படியைக் கருத்திற்கொண்டிருந்தனர். இது பிழையானதாகும்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- மூலதனக் கிரயம் தொடர்பான பாடத்தின் கோட்பாடுகளையும் சூத்திரங்களையும் கற்கவும். சூத்திரங்களை மனப்பாடம் செய்வது மட்டும் போதியதல்ல. மாறாக ஒவ்வொரு சூத்திரத்திற்கும் பின்னாலுள்ள உள்ளார்ந்த கோட்பாடுகளை புரிந்து வைத்திருத்தல் வேண்டும்.
- விடைகளைப் பெறும்போது சம்பந்தப்பட்ட படிமுறைகள் மற்றும் செய்முறைகளைக் காட்டுவது எப்பொழுதும் அவசியமானதாகும்.
- எண்கணித வழுக்களைத் தவிர்ப்பதற்கு முயற்சிப்பதுடன் விடைகளை இரு முறை பரிசீலிக்கவும்.
- சுய கற்றல் புத்தகம் மற்றும் கடந்தகால வினாத்தாள்களிலுள்ள கணக்குகளைச் செய்து பார்க்கவும்.

## வினா இல. 09

### பகுதி (A)

இவ்வினா நியமக் கிரயமிடல் முரண்கள் பற்றிய அறிவையும் பாதிடப்பட்ட பங்களிப்பினை உண்மைப் பங்களிப்புடன் கணக்கிணக்கம் செய்யும் தொழிற்பாட்டுக் கூற்றினைத் தயாரிப்பது பற்றிய அறிவையும் பரீட்சித்தது.

**செயலாற்றுகை :**

பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன் பகுதி (A) இற்கான செயலாற்றுகையும் திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது. சில பரீட்சார்த்திகள் விற்பனைக் கனவளவு எல்லை முரணைச் சரியாகக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள், கணிப்பிடப்பட்ட முரண்கள் சாதகமானதா (சாதகம்) அல்லது பாதகமானதா (பாதகம்) என்பதை அடையாளங் கண்டிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் தொழிற்பாட்டுக் கூற்றிற்குப் பதிலாக நெகிழ்ச்சிப் பாதீடு ஒன்றினைத் தயாரித்திருந்தனர்.

**பகுதி (B)**

இங்கு, இணைந்த இலாபக் கனவளவு விகிதங்களைக் கணிப்பிடுவதற்கும் ஒவ்வொரு வகையான பொருட்களுக்கும் தனித்தனியாக மாதாந்தச் சமப்பாட்டு மட்டங்களைக் கணிப்பதற்கும் தேவைப்படுத் தப்பட்டது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் பெட்டியொன்றிற்கான பங்களிப்பைக் கணிப்பிட்டிருந்த போதிலும் அவர்களில் பலர் இணைந்த இலாபக் கனவளவு விகிதம் மற்றும் ஒவ்வொரு வகையான பொருட்களுக்கும் தனித்தனியாக மாதாந்த சமப்பாட்டு மட்டங்கள் ஆகியவற்றைக் கணிப்பதற்குத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் இரண்டு பொருட்களுக்காகவும் தனித்தனியாக இலாபக் கனவளவு விகிதத்தை கணிப்பிடும்போது பிழையான கணித்தல்களைச் செய்திருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- பாடத்துடன் சம்பந்தப்பட்ட கோட்பாட்டையும் சூத்திரத்தையுத் கற்றுக்கொள்க. சூத்திரங்களை மனப்பாடம் செய்வது மட்டும் போதியதல்ல. மாறாக ஒவ்வொரு சூத்திரத்திற்கும் பின்னாலுள்ள உள்ளார்ந்த கோட்பாடுகளை புரிந்து வைத்திருத்தல் வேண்டும்.
- விடைகளைப் பெறும்போது சம்பந்தப்பட்ட படிமுறைகள் மற்றும் செய்முறைகளைக் காட்டுவது எப்பொழுதும் அவசியமானதாகும்.
- எண்கணித வழுக்களைத் தவிர்ப்பதற்கு முயற்சிப்பதுடன் விடைகளை இரு முறை பரிசீலிக்கவும்.
- சுய கற்றல் புத்தகம் மற்றும் கடந்தகால வினாத்தாள்களிலுள்ள கணக்குகளைச் செய்து பார்க்கவும்.

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தை விருத்தி செய்வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்</u>**

**(1)** பாடத்திட்டத்திலுள்ள முழுமையான உள்ளடக்கத்தையும் பூரணமாகப் படிப்பதுடன் ஒவ்வொரு அலகிலும் அல்லது பரப்பிலும் எதிர்பார்க்கப்படுகின்ற அறிவு மட்டம் பற்றிய ஆழமான புரிந்துணர்வினை விருத்தி செய்யவும்.

**(2)** பரீட்சார்த்திகள் வினாவைக் கவனமாகப் பல தடவைகள் வாசிக்க வேண்டும் என்பதுடன் கணிப்பீடுகளுடன் தொடர்புடைய சகல செய்முறைகளையும் தெளிவாகக் காட்டுதலும் வேண்டும்.

**(3)** வினாக்களுக்கு விடைளிக்கும்போது அதனுடன் தொடர்புடையதாக ஏதாவது எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றினைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

**(4)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்களும் சரியாக எழுதப்படுதல் வேண்டும். விடைத்தாள்களை ஒப்படைப்பதற்கு முன் வினா இலக்கங்கள் போன்றவற்றை மீளவும் பரிசோதித்தல் முக்கியமானதாகும்.

**(5)** வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும்.

**(6)** கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட விடைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துவது அறிவு, திறன்கள் மற்றும் அனுபவம் போன்றவற்றைக் கூர்மைப்படுத்துவதற்கு உதவி புரியும். உண்மையான பரீட்சை வினாத்தாள்களில் அதே மாதிரியான வினாக்கள் மீளவும் வழங்கப்படலாம் என்பதால் இது எப்பொழுதும் அனுகூலமானதாக இருக்கும்.

**(7)** **சுய கற்றல் புத்தகத்தைப்** படிப்பது அவசியமானது என்பதுடன் **சுய கற்றல் புத்தகத் திலுள்ள** உதாரணங்களைச் செய்துபார்த்து பயிற்சி பெறுவதும் முக்கியமானதாகும்.

**(8)** பாடத்துடன் சம்பந்தப்பட்ட புத்தகங்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றவற்றைப் படிப்பதுடன் சம்பந்தப்பட்ட பாடப் பரப்புடன் தொடர்புடைய ஏனைய வாசிப்புப் புத்தகங் களையும் படித்தல் வேண்டும்.

**(9)** நேர முகாமைத்துவமானது பரீட்சையின்போது மிக முக்கியமானதாகும். ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளை அவதானிப்பதன் மூலம் விடையளிப்பதற்காக ஒவ்வொரு வினாவுக்கும் செலவழிக்கக்கூடிய நேரத்தினைப் பரீட்சார்த்திகள் மதிப்பிட முடியும்.

**(10)** நல்ல தயார்படுத்தலுடனும் பரீட்சையில் சித்தியடைவதற்கான திடத்துடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -